16/11/1951 M.V.M M BANGALORE

போர்வாள்

வாள் 5 வீச்சு 11

17-11-51 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:

காஞ்சி. மணிமொழியார்

மா. இளஞ்செழியன் B.A.Hons

துணை ஆசிரியர்:

காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை 2 அணா

ஷ்டம் உண்டு—இலாபம் இல்லை!

கஷ்டம் உண்டு—களிப்பு இல்லை!

விசித்திரமானதோர் வேடிக்கை!

★

"ஆண்டவனே உனக்குக் கண் இல்லையா? இந்த ஏழை படும் டு உனக்குத் தெரியவில்லையா? ன் பெண்டு பிள்ளைகள் பட் னி கிடந்து பரிதவிப்பதை நீ றியமாட்டாயா? என் குடும் ம் முழுவதும் சென்ற ழெட்டு மாத காலமாக வறு மைத் தேளால் கொட்டப்பட்டு வதனைப் புயலிற் சிக்கி மடிவ தைப் பார்த்துக் கொண்டும் நீ ம்மா இருக்கிறாயே—இருக்க ாமா? கள்ளமார்க்கெட்டில் டி அரிசி விலை ரூபா ஒன்றரை என்று விற்கிறதே—இப்படி விற் றால் எப்படித்தான் நான் என் குடும்பத்தைக் காப்பாற்றுவது? ஆண்டவனே, ஆபத் பாந்த வனே, அனுதாரக்ஷகனே—உன் னைத்தான் நான் நம்பியிருக்கி றேன். நீதான் எனக்கு அருள் புரிய வேண்டும். எப்படியாவது அரிசி விலையை நீ உடனே குறைத்தாக வேண்டும். நீ மனம் வைத்தால் ஆகாதது என்ன இருக்கிறது? அரிசி விலை குறைந்தால்தான் என் குடும்பத் துயர் தீரும். என் பிள்ளைகளின் சோகம் போகும். என் வேதனையும் வறுமையும் குறையும். சர்வேஸ்வரா, சிறிது தயை காட்டு இந்த ஏழை மீது. அரிசி விலையை உடனே குறைத்து என் அல்லலைச் சிறிது குறைக்க வழி செய்."

கட்டை வெட்டிப் பிழைக்கும் கருப்பண்ணன் எல்லாம் வல்ல ஆண்டவனைப் பார்த்து இது போலத்தான் பிரார்த்தனை புரிகிறான். அவன் ஆண்டவனைப் பார்த்துப் பிரார்த்தனை புரிகிற நேரத்திலே அவனைப் பார்க்கிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுடைய உள்ளம் அனலிடு மெழுகாக உருகத்தான் செய்யும். அவனுடைய பிரார்த்தனை அவ்வளவு உருக்கமாகத்தான் இருக்கும். உண்மையிலேயே அவனுடைய நிலை கல் நெஞ்சையும் கரைக்கவைக்கத் தக்க அளவு பரிதாபகரமானது தான். காலையிலே, கருக்கல் நேரத்திலே, கோழி கூவும் வேளையிலே தோளில் கோடாலியைத் தாங்கிக் கொண்டு வெளியே அவன் புறப்பட்டால், இரவு, கோட்டான் கூவுகிற நேரத்தையும் கடந்து தான் அவன் வீடு திரும்புகிறான். காலை முதல் மாலைவரை அவன் இதுபோல ஓயாது உழைத்து கட்டை பிளக்கும் கடின காரியம் புரிந்தும் கூட, ஒரு நாளைக்கெல்லாம் சேர்த்து அவன் பெறும் ஊதியம் அதிகம் போனால் ஒன்று அல்லது இரண்டு ரூபாய்களுக்கு மேல்

இருப்பதில்லை மாதம் முப்பது நாட்களும் அவன் மாடு போல உழைத்தாலும் ஐம்பது அல்லது அறுபது வெண்பொற் காசுகளைத்தான் அவன் பார்க்க முடிகிறது. அவன் திருமணம் ஆனவன். குழந்தைகளோ மூன்று இருக்கின்றன. வேலை செய்ய முடியாத அளவு வயதேறிய தாய் தந்தையர்கள் வேறு அவனுடன்தான் இருக்கின்றனர். அவன் ஒண்டிக்கட்டை, தன்னந்தனியாக உழைத்து, இந்த ஆறு ஜீவன்களையும் காப்பாற்றியாக வேண்டும். தன் வயிற்றிற்கும் ஏதோ கொஞ்சம் போட்டுக் கொள்ள வேண்டும். இவ்வளவு பெரிய பாரம் அவன் கழுத்தை முறிக்கிறது. ஆனால் அவனுக்குக் கிடைக்கிற மாத ஊதியமோ ரூபா ஐம்பது அல்லது அறுபது. இந்த நிலையில் அரிசி விலை படி ரூபா ஒன்றரை என்றால் என்ன செய்வான் அந்த ஏழை? ஆண்டவனைப் பார்த்துப் பிரார்த்தனை புரிகிறான்—ஆபத்பாந்தவா — உன் அருள் எனக்குக் கிட்டாதா என்று! அவன் மாடமாளிகை கேட்கவில்லை, தோட்டம்துரவு வேண்டுமென்று கூறவில்லை. சாய்ந்து கொள்ள சோபாவும் மேலே வீச மின்சார விசிறியும் இருக்க வேண்டுமென்று ஆசைபடவில்லை. வெளியே உலவ "மாரிஸ் மைனர்" காரும், உள்ளே அநுபவிக்க எட்டு வால்வ் ரேடியோவும் இருக்க வேண்டுமென்று அவன் உள்ளம் ஆவலடையவில்லை. ட்வீட் கோட்டும், சில்க் ஷர்ட்டும், பேட்டா ஷூவும், பார்க்கர் பேனாவும், வெஸ்ட் என்ட் வாட்ச்சும் தன்னை அலங்கரிக்க வேண்டுமென்று அந்தப் பாட்டாளி நினைக்கவுமில்லை—நினைக்கும் அளவு அந்தப் பெயர்கள், அவனுக்குத் தெரியவும் தெரியாது. டில்லி பாதுஷா, குஞ்சாலாடு, குலோப்ஜான், காசி அல்வா, மைசூர் பாகு, ரவா கேசரி இவ்வளவும் பரிமாறப்பட்ட இலை வேண்டுமென்றோ, இனிப்பு—புளிப்பு—துவர்ப்பு—உவர்ப்பு—கார்ப்பு—கைப்பு இத்தனை சுவைகளையும் ஊட்டும் சிறந்த உணவு வேண்டுமென்றோ அந்த ஏழை ஆசைப்படவில்லை. மந்திரி நாற்காலியையோ கவர்னர் கைலாகையோ சட்டசபை பிரவேசத்தையோ சொகுசான எம். எல். ஏ. வாழ்வையோ கூட அல்ல அவன் விரும்புவது. அவன் கேட்பதெல்லாம் தனக்கும் தன் வீட்டாருக்கும் வயிறார உண்பதற்குப் போதுமான அளவு சாதாரண அரிசிச்சோறு. தன் குடும்பம் வாழ்வதற்குத் தேவையான வசதிகள் நிரம்பிய ஒரு சிறு குடிசை. அனைவரும் கட்டிக் கொள்வதற்குக் கொஞ்சம் கந்தல் துணிகள், இவ்வளவுதான் அவன் விரும்புவது. இவ்வளவேதான் அவன் கேட்பது. இதனைத்தான் அவனால் பெறமுடியவில்லை. எப்படிப்பெற முடியும் அவனால் படி அரிசி விலை ரூபா ஒன்றரை என்கிற நிலை நாட்டிலே இருக்குமானால்? ஆகவேதான் அவன் ஆண்டவனைப் பார்த்துப் பிரார்த்தனை புரிகிறான்-- ஆண்டவனே--அரிசி விலையைக் குறைத்திடு என்று. அவனுடைய கோரிக்கை நேர்மையானது. மிகவும் நியாயமானது. நிச்சயம் நிறைவேற்றப்படவேண்டியது. நிறைவேற்றித்தான் தருவார் ஆண்டவன்—உலகத்திலே பிரார்த்தனை புரிபவன் கட்டைவெட்டும் கருப்பண்ணன் ஒருவன் மட்டுமாக இருந்தால்! ஆனால் அவனா ஒருவன்தானா பிரார்த்தனை புரிகிறான் இந்த உலகத்தில்? இல்லையே! கட்டைவெட்டும் கருப்பண்ணன், சென்னை செங்காங்கடை ஓர திலே இருந்துகொண்டு, "அரி விலையைக் குறைத்தருள் புரிவா அனைத்துயிர்களைப் படைத் அருளாளா" என்று ஆண்டவனைப் பார்த்துப் பிரார்த்தனை புரிகிற அதே நேரத்திலே காஞ்சிபுரத்திற்கு அருகிலேயோ திருநெல்வேலிக்குப் பக்கத்திலேயோ இருக்கிற கிராமங்களில் உலவுகிற ஏர்பிடிக்கும் ஏகாம்பரமும் ஆண்டவனைப் பார்த்து பிரார்த்தனை புரியத்தான் செய்கிறான்.

அதோ தெரிகிறதல்லவா ஏகாம்பரம் வாழும் கிராமத்தில் ஏக உயரத்திற்கு உயர்ந்திருக்கிற கோபுரம் ஒன்று. அந்தக் கோபுரம்தான், தீராத வினைகளையெல்லாம் தீர்த்து வைக்கும் திவ்யபுரீஸ்வரர் ஆலயத்தின் அருமையான கோபுரம். அந்தக் கோபுரத்திற்குக் கீழே நுழைவு வாயில். நுழைவு வாயிலுக்கு உள்ளே பிரகாரம். பிரகாரத்தைத் தாண்டினால் மண்டபம். அதற்கு

ஆசிரியர்

M.R.M. அப்துற்-ரஹீம் B.A.

படித்துவிட்டீர்களா?
இல்லையேல் இன்றே படித்துப் பயனடையுங்கள்!

	ரூ.	அ.
வாழ்வைத் துவக்கு	2	8
வாழ்க்கையில் வெற்றி	2	8
கவலைப்படாதே	2	8
உலகமேதைகள்	1	8
இஸ்லாமிய திலகங்கள்	2	12
முஸ்லிம் சமுதாயச் சிற்பிகள்	2	0

வெளிவருகிறது! வெளிவருகிறது!

முன்னேறுவது எப்படி?	2	8
சுபிட்சமாய் வாழ்!	(அச்சில்)	

பகுத்தறிவுப் பாசறை
147, பவழக்காரத்தெரு சென்னை.

உள்ளே ஆண்டவன் சந்நிதி. சந்நிதிக்கு முன்னதாக இருபுறங்களிலும் நின்றுகொண்டு, எத்தனையோ பக்தர்கள், கண்களை மூடிக்கொண்டும், பாசுரங்களை இசைத்துக் கொண்டும், கர்ப்பூரம் கொளுத்திக் கொண்டும், தேங்காயை உடைத்துக்கொண்டும், ஆண்டவனை நோக்கி ஏதேதோவேண்டுகோள்கள் விடுத்துக் கொண்டிருக்கிறார்களே, அந்தக் கூட்டத்தைக் கொஞ்சம் கூர்ந்து கவனியுங்கள் — ஏர் பிடிக்கும் ஏகாம்பரம் காட்சி அளிப்பான் —மேல்துண்டு, இடுப்பிலே சுற்றப் பட்டிருக்கும் பக்தியின் அடையாளமாக— நெற்றியிலே திருநீறு, கழுத்திலே உருத்திராட்சம், கையிலே கர்ப்பூரம், உதட்டிலே திருவாசகம் இவ்வளவும் இருக்கும ஏகாம்பரத்திடம். இப்போது தெரிகிறதல்லவா ஏகாம்பரத்தை—அவன், அதோ, பயபக்தியோடு நின்றுகொண்டு பிராத்தனை புரிகிறான் அல்லவா—அவன் கூறுகிற வார்த்தைகள்கூட நமக்குக்கேட்கின்றன—இல்லையா?

“திவ்யபுரீஸ்வரரே, திரிபுரம் எரித்தவரே, விரிசடை உடையவரே, பாதி மதி படைத்தவரே, என்றெல்லாம் புலவர்களால் பாராட்டப்படுகின்ற பார்வதி நாதனே, ஏழை வந்திருக்கிறேன். ஏகாம்பரம் வந்திருக்கிறேன். என்னைக் கொஞ்சம் கடைக்கண் பாலித்தருள்வாயாக. என் தாய், தந்தை, அத்தை, மூன்று பெண் பிள்ளைகள், நான்கு ஆண் குழந்தைகள், பள்ளிக்கூடத்தில் படிக்கும் பெரிய பையன், மனைவி மங்கம்மாள், அவள் தங்கை அகிலாண்டம் இவ்வளவு பேரையும் நான்தான் காப்பாற்றியாக வேண்டும். எனக்கிருப்பதோ இரண்டு ஏகர் நிலம். அதில் இந்த ஆண்டு விளைந்திருப்பதோ ரொம்பவும் சொற்பம். போட்ட முதல் தேறுவதுகூட கஷ்டம். என் குடும்பம் வாழவேண்டுமானால், பட்டினி எங்களை அண்டாமல் இருக்கவேண்டுமானால், அரிசி விலை அதிகமாக உயர வேண்டும். அரிசிவிலை அதிகமாக உயர்ந்தால்தான், என் சொற்ப விளைச்சலுக்கு அதிகப் பணம் கிடைக்கும். என்சொற்ப விளைச்சலுக்கு அதிகப் பணம் கிடைத்தால்தான் என் பெண்டு பிள்ளைகள் இந்த வருஷம் சுகமாக இருப்பார்கள். இந்த ஏழைமீது உனக்கு அன்பு இருந்தால், அருள் இருந்தால், கருணை கிஞ்சிற்றேனும் இருந்தால், அரிசி விலையை நீ உயர்த்தித்தான் ஆக வேண்டும். கருணைமூர்த்தி, உன்னைத்தான் நம்பிக்கொண்டிருக்கிறேன், மாதொரு பாகனே. நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும். கங்கைவார் சடையனே, கைவிட்டுவிடாதே என்னை. மூவர்க்கும் முதல்வனே, அரிசி விலையை அதிகரிக்க மறந்துவிடாதே.”

ஏர்பிடிக்கும் ஏகாம்பரத்தின் பிரார்த்தனை இது. இந்தப்பிரார்த்தனையிலேயும் குற்றம் இருக்கிறது என்று யாரும் கூறிவிட முடியாது.

எங்கள் குடும்பம் பெரிசு என்று ஏகாம்பரம் பாடுவதில்லை —ஆனால் உண்மை அதுதான். பெரிய குடும்பம்—செலவு அதிகம்—இருப்பதோ இரண்டே இரண்டு ஏகர் — விளைச்சலோ மிகவும் குறைவு—அந்த அரிசி ஒன்றுதான் அவனிடம் இருக்கிற சொத்து—அரிசி அதிக விலைக்கு விற்றால்தான் ரூபா அணா பைசா அவனுக்குப் போதுமான அளவு கிடைக்கும் —பட்டினியும் பஞ்சமும் அவன் வீட்டாரைக்கொத்தாமல் இருக்கும — ஆகவேதான் அவன், அரிசி விலையை உயர்த்திடு ஆண்டவனே என்று உருக்கமாகவும் உள்ளன்போடும்பிரார்த்தனை புரிகிறான்—தவறா அவன் கேட்பது? யார் கூற முடியும் தவறு என்று?

கட்டை வெட்டும் கருப்பண்ணன், அரிசி விலையைக் குறைத்தால்தான் தான் வாழமுடியுமென்று ஆண்டவனைப் பார்த்துப் பிரார்த்தனை புரிகிற அதே நேரத்தில்தான், ஏர்முனையில் வாழும் ஏகாம்பரம், அரிசி விலையை அதிகரித்தால்தான் தன் குடும்பம் நிலைக்கும் என்று இறைவனை நோக்கிக் கோரிக்கை விடுக்கிறான்.

என்ன செய்வார் பாவம் ஆண்டவன்? கஷ்டப்படுகிறானே கருப்பண்ணன்—அரிசி விலையைக் குறைத்தால்தானே அவன் வாழமுடியும் என்று கருதி, அவர், அரிசி விலையைக் குறைக்கத் தொடங்கிவிட்டால், ஏர் பிடிக்கும் ஏகாம்பரத்தின் கஷ்டம் அதிகமாகும். தொல்லையும்துயரமும் அவன் குடும்பத்தில் எல்லை மீறிச் சென்றுவிடும்.

வேதனைப்படுகிறானே ஏகாம்பரம்—படவிடுவது முறையல்லவே—பத்தரை மாற்றுத் தங்கம் போன்ற குணம் உடையவனாயிற்றே அப் பக்த சிரோன்மணி—அவன் துயரம் தீர

(12-ம் பக்கம் பார்க்க)

“போர்வாள்”

சந்தா விவரம்

★

ஓராண்டு	ரூ. 6.8 0
6 மாதம்	ரூ. 3 4 0

போர்வாள் அலுவலகம்

பவழக்காரத் தெரு,

சென்னை 1.

★ உரிமைப் போராட்டம் ★

ஊராள்வோருக்கு ஒரு படிப்பினை!

[இரா. மறைமுதல்வன்]

எங்கு அடக்குமுறை தாண்டவமாடுகிறதோ, மக்களின் உரிமை தட்டிப்பறிக்கப்படுகிறதோ, அவர்களுடைய நோக்கங்கள், லட்சியங்கள், சுட்டுப்பொசுக்கப்படுகின்றனவோ, அங்கெல்லாம் உரிமைப் போராட்டங்கள்—புரட்சிப் போராட்டங்கள்—வீரப்போராட்டங்கள்—நடந்தே தீரும்!

இது வரலாறு உணர்த்தும் உண்மை! பிரான்சு, ரஷ்யா, சீனா, அமெரிக்கா.........இப்படி பலநாடுகளில் நடந்த புரட்சிகளில் புதைந்து கிடக்கும் உண்மை! ஊராள்வோர் யாராயிருந்தாலும் இதை உணரவேண்டும். உணர்ந்து ஒழுங்காக ஆட்சி நடத்தவேண்டும்! இல்லாவிட்டால், முன்னேற்றத்தைத் தடுக்கும் முட்டுக்கட்டைகளாக இருந்த சர்வாதிகாரிகள் சரிந்ததைப்போல, மக்கள் மனதில் அரும்புவிட்ட சுதந்திர எண்ணங்களை நசுக்க ஏகாதிபத்தியங்கள் செய்த ஏற்பாடுகள் மண்ணோடு மண்ணாகி மக்கிமறைந்ததைப்போல, மதுவையும் மங்கையின் இதழையும் சுவைத்துக்கொண்டே மஞ்சத்தில் புரண்டமாடிவிட்டுச் செல்லப்பிள்ளைகளும், பாமரனை ஏய்த்துப் பிழைத்த பாதிரிகளும், அரண்மனையில் அதிகார வெறியில் ஆடிப்பாடிக் கிடந்த ஆணவ சொரூபங்களும் வேரறுக்கப்பட்டதைப்போல........அழிந்தொழிய வேண்டியதுதான்! இது நாம் கூறுவதல்ல, வரலாறு தரும் பாடம்!

அநேகமாக ஒவ்வொரு நாட்டிலும் ஏற்பட்ட உரிமைப் போராட்டங்கள், ஒடித்தெறியப்பட்ட எலும்பை எழுதுகோலாக்கி, வழிந்தோடிய இரத்தத்தை மையாக்கி, பிளக்கப்பட்ட மண்டையோடுகளில் எழுதப்பட்டது! இதேபோலத்தான் ஹாலந்து நடத்திய போராட்டம்—அந்நாட்டு மக்கள் ஸ்பெயின் ஆதிக்கத்தை எதிர்த்துத் தொடுத்த உரிமைப்போர்—உலகையே உலுக்கிவிட்டது! அந்நிய நாட்டாரின் அடிமைச்சாசனத்தில் கையெழுத்திடுவதைவிட எங்கள் அனைவருடைய மரண ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதுமேல் என்ற மன உறுதியுடன் அவர்கள் நடத்திய உரிமைப்போர் இன்றைய அடக்குமுறை அதிபர்களுக்கு ஒரு எச்சரிக்கை!

ஹாலந்து, பெல்ஜியம்—இவை இரண்டும் ஐரோப்பாவின் மூலையில் உள்ள சிறு நாடுகள்! சுற்றுப் பக்கத்தைவிட—கடல் மட்டத்தைவிட—தாழ்வான நாடுகள். ஆகவே "தாழ் நாடுகள்" என்று அழைக்கப்பட்டன! பலமான அணைகளைக் கட்டி கடல்நீரைத் தடுத்து வைத்திருந்தார்கள்! அந்நாட்டிலே வாழ்வோர் கடலிலே கலம் செலுத்தி, வாணிகத்திலே சிறந்து விளங்கினார்கள்! புரூஜஸ், கெண்ட், ஆண்ட்வர்ப்—இந்த நகரங்கள் அதற்கு சரியான அத்தாட்சியாக அமைந்தன! 2500—கப்பல்கள் வந்து நிற்கின்ற அளவுக்கு ஆண்ட்வர்ப் ஐரோப்பாவிலேயே சிறந்த துறைமுகமாக விளங்கியது!

பதினாறும் நூற்றாண்டில் மெள்ள மெள்ள புதுக்கருத்துக்கள் தாழ் நாடுகளில் தோன்றி வளர ஆரம்பித்தன! சுதந்திர எண்ணம் மக்கள் மனதில் அரும்புவிட்டது! அவர்கள் விடுதலையைப் பற்றி நினைக்க ஆரம்பித்தார்கள்! உரிமை உணர்வு அவர்கள் இதயங்களில் இடம்பெற ஆரம்பித்தது! பாவமன்னிப்புச் சீட்டு என்ற பெயரால் பாமரர்களின் பணத்தைப் பகற்கொள்ளையடிக்கும் பாதிரிகளின் ஏமாற்றுவித்தைகளையும், மதத்தின் பெயரால் நடக்கும் அட்டூழியங்களையும், மக்களுக்கு எடுத்துக் கூறிய மாவீரன் மார்டின் லூதரின் "பிராட்டஸ்டண்டு" இயக்கம்பரவியது!

ஆனால் இந்த முன்னேற்றத்தைக் குழிதோண்டிப் புதைக்க முனைந்தது அரசாங்கம் அடக்குமுறை மூலம்! அப்பொழுது தாழ் நாடுகள் ஸ்பெயின் ஆதிக்கத்தின் கீழிருந்தன! ஸ்பெயின் மன்னன் இரண்டாம் பிலிப் தாழ் நாடுகளில் ஏற்பட்ட விடுதலை உணர்ச்சியை நசுக்க ஆல்வா என்பவனை அனுப்பினான். ஆல்வா கொடுமையின் பிம்பம்! ஏகாதிபத்தியத்தின் உருவம்! அதிகாரவெறியின் இருப்பிடம்! ஆணவத்தின் சொரூபம்! அவனுக்கு மக்களை உயிரோடு கொளுத்துவது பொழுது போக்கு! தூக்கிலே தொங்கவிடுவது இன்பமான காட்சி! சித்திரவதை செய்வது சிங்கார விளையாட்டு!

தாழ்நாடுகளுக்கு வந்தவுடன் ஆல்வா மத விசாரணை சபையொன்றையும், கொலைக்குழு (Blood Council) ஒன்றையும் நிறுவினான்! யார் யாரை ஒழிக்க நினைத்தானோ அவர்களையெல்லாம் மதவிசாரணை சபையில் கொண்டுவந்து நிறுத்தினான்! "பாஷண்டர்" என்று குற்றஞ்சாட்டினான்! தூக்குமேடையில் தொங்கவிட்டான்! திருவிழா நடக்கும் போதெல்லாம் "மதபலி" என்ற பெயரால் "பாஷண்டர்களை" உயிரோடு நெருப்பிலே வைத்துக்கொளுத்தினான்! எரிமரத்தைத் தழுவச் செய்தான்! சிறையிலடைத்து சித்திரவதை செய்தான்!

1568ம் ஆண்டு மூப்பது இலட்சம் பேருக்கு மரண தண்டனை விதித்தான்! இப்படியெல்லாம் செய்துதான் ஒரு இரக்கமில்லாத அரக்கன் என்பதை நிரூபித்துவிட்டான்! கொடுமை செய்வதில் தைமூரையும், மங்கோலியரையும் தோற்கடித்துவிட்டான்!

ஆனால் அடக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க மக்களின் எதிர்ப்புச் சக்தியும் அதிகரித்தது! அதிகார வர்க்கத்தின் அதட்டலுக்கு அடிபணிந்தவர்கள், மதத்துக்கு மண்டியிட்டவர்கள்—தலை நிமிர்ந்து நடக்க ஆரம்பித்தார்கள்! அவர்களிடையே வில்லியம் என்ற பெரியார் ஒருவர் தோன்றினார்! அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டித்தார்! மக்களிடம் அதிகார வர்க்கங்களின் அட்டூழியங்களை எடுத்துக் காட்டினார். "தாழ்நாட்டாரே தாழ் நாடுகளை ஒடுக்கி வருகிறார்கள். ஆல்வா தமக்கிருக்கும் சக்தியைப்பற்றிப் பிரமாதபபடுத்திக் கொள்கிறார். அந்த சக்தி அவருக்கு எங்கிருந்து உண்டாயிற்று? உங்களிடமிருந்துதான்! தாழ்நாட்டு நகரங்களிடமிருந்துதான்! அவருக்குக் கப்பல்களும், பணமும், பொருளும், சேனைகளும், ஆயுதங்களும் எங்கிருந்து கிடைக்கின்றன? தாழ்நாட்டுமக்களிடமிருந்துதான்." என்று வீரவுரையாற்றினார்! குமுறும் எரிமலையானார்கள் மக்கள்!

1568-ம் ஆண்டு எரிமலைகனலைக் கக்க ஆரம்பித்துவிட்டது! ஆம்...! அவ்வாண்டு மக்கள் எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப்போர் தொடுத்தார்கள்! தங்களுடைய உரிமைப் போராட்டத்தைத் துவக்கினார்கள்! அந்நிய ஆதிக்கத்துக்குச் சவக்குழி தோண்ட ஆரம்பித்தார்கள்! ஆல் [illegible] வாவுக்கும் மக்களுக்குமிடையே பெரும் போராட்டம்! ஆல்வா ஒவ்வொரு நகராக முற்றுகையிட்டுக் கொண்டே போனான். ஹார்லெம் நகர மக்கள் ஆல்வாவின் ராணுவத்தை எதிர்த்து, பட்டினியால் மடியும் வரை போரிட்டார்கள்! அல்க்மார் நகரத்தினர் தங்கள் நகரை அன்னியன் தீண்டாதவாறு அணைகளை உடைத்துவிட்டார்கள்! லெய்டன் நகர மக்கள் தங்கள் நகரைக்காப்பாற்ற நடத்திய போராட்டம் உள்ளத்தை உருக்கும் வகையில் அமைந்திருந்தது!

ஆல்வாவினால் முற்றுகையிடப்பட்ட லெய்டன் நகரில் சில நாட்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் மடிந்தார்கள் பட்டினியினால்! உண்ண உணவு இல்லை! ஆகவே, அந்த நகரிலுள்ள மரங்களில் பசிய இலையே இல்லாதவாறு, இலைகளைப் பறித்துத் தின்றார்கள்! குப்பையில் கிடக்கும் துண்டு துணுக்குகளுக்கு நாயுடன் போட்டி போட்டார்கள்! இப்படியெல்லாம் ஏற்பட்டாலுங் கூட தங்கள் கொள்கையை விடவில்லை! உறுதியாக நின்றார்கள்! உரிமைப் போராட்டத்தை உயிரெனமதித்தார்கள்! ஸ்பானியரைப் பார்த்து வீர முழக்கமிட்டார்கள், "உங்களிடம் சரண் புகுவதைக் காட்டிலும், எலியோ, நாயோ வேறு எதையோ தின்றாகிலும் உயிர் வாழ்வோம்! எங்களைத் தவிர மற்ற யாவும் மடிந்தொழிந்து விட்டால் நாங்கள் எங்களுடைய இடது கைகளை உணவாகக் கொண்டு வலது கைகளால் எங்களுடைய பெண்களையும், சுதந்திரத்தையும் அன்னியக் கொடுங்கோலன் தீண்டாதவாறு பாதுகாப்போம்! கடவுளே எங்கள் மீது சினங்கொண்டு, ஒருவித நன்மையும் செய்யாது, எங்களை அழித்துவிட நினைத்தாலும், அப்பொழுதுகூட நீங்கள் எங்கள் நகருக்குள் நுழையவொட்டோம்! எல்லாம் போய்விட்டது வேறு வழியில்லை என்கிற நிலைமை ஏற்பட்டாலுங்கூட நீங்கள் எங்களுடைய நகரில் நுழைவதற்கும், உரிமைகளைப் பறிப்பதற்கும் இடங்கொடோம்! அதைவிட நாங்களே எங்களுடைய கைகளாலேயே எங்களுடைய நன்னகருக்குத் தீ வைத்துவிட்டு அத்தீயில் நாங்கள்—ஆண்கள்—பெண்கள்—குழந்தை குட்டிகள்—அனைவரும் விழுந்து [illegible] மடிவோம்" என்று!

நாட்கள் உருண்டோடின. ஆனால் லெய்டன் நகர மக்களுக்கு எந்த விதமான உதவியும் கிடைக்கவில்லை. கடைசியில் அவர்கள் தங்களுடைய இதர மாகாணங்களிலுள்ள தோழர்களுக்கு ஒரு செய்தி விடுத்தார்கள். "நாட்டைப் பகைவன் கொள்வதைப் பார்க்கிலும் கடல் கொள்ளட்டும்" என்பதுதான் அவர்கள் விடுத்த செய்தி! அன்னியரிடம் அடிபணிவதைக் காட்டிலும் மரணம் மேல் என்று கூறி மரண ஒப்பந்தத்தில் கையெழுத்திடத்தயாரானார்கள்! துன்பத்தால் நொந்துவாடும் லெய்டன் நகர மக்களுக்கு, 'லெய்டன் நகரே! உன்னைக் கை விடுவதைவிட நமது நாடு முழுவதையும் நமது உடைமைகள் யாவற்றையும் கடல் அலைகள் விழுங்கக் காண்போம்" என்ற செய்தியை அனுப்பினார்கள் அவர்களுடைய தோழர்கள்!

எந்தக் கைகளினால், பாடுபட்டுக் கட்டினார்களோ அதே கைகளினால் அணைகளை ஒவ்வொன்றாக உடைத்தெறிந்தார்கள்! கடல்நீர் நாட்டிலே புகுந்தது! கடலிலே நின்று கொண்டிருந்த டச்சுக் கப்பல்களும் கூடவே வந்துவிட்டன! செத்துக் கொண்டிருந்த மக்களுக்கு உணவும் உதவியும் கிடைத்தது! ஸ்பானியர் முறியடிக்கப்பட்டனர்! லெய்டன் நகரம் அன்னியரிடம் சிக்கிச் சிதையும் கோரக் கொடுமையிலிருந்து தப்பியது!

இந்த உரிமைப் போராட்டத்தை நடத்தியது பெரும்பாலும் ஹாலந்துதான்! ஏனெனில் பெல்ஜியத்திலிருந்த பிரபுக்கள் என்று கூறப்படும் சில சோற்றாலடித்த பிண்டங்கள், நாட்டு விடுதலையைப்பற்றிக் கவலை கொள்ளாது புகழுக்கும் பட்டத்துக்கும் தங்கள் உரிமை உணர்வைத்தூக்கில் போட்டுவிட்டார்கள்! ஸ்பானியரிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு தங்கள் இனத்தவரையே நசுக்க உதவி செய்தனர் அந்தத் தன்மான மற்ற தறுதலைகள்! மேலும் புரட்சிக் கருத்துக்கள் அப்பொழுது பெல்ஜியத்தில் அவ்வளவாகப் பரவவில்லை! ஆகவே பெல்ஜியம் உரிமைப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை!

கடைசியில் 1609-ம் ஆண்டு, ஹாலந்து, ஸ்பானிய ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைந்தது! அவர்களுடைய, ஏறக்குறைய நாற்பது வருட கால உரிமைப் போராட்டத்தின் விளைவாக ஏகாதிபத்தியம் உருட்டித் தள்ளப்பட்டது! அடக்குமுறை அழிக்கப்பட்டது! அதிகார வெறி பிடித்தோர் வெட்டியெறியப்பட்டனர்! தூக்குமேடை தூள் தூளாகியது! முடியாட்சி முடிந்தது! குடியாட்சி பூத்தது! உரிமைமணம் எங்கும் வீசியது! அந்த மணத்திலே திளைத்து மகிழ்ந்தனர் மக்கள்!

மெத்த வளருது மேற்கே.....!

[நா. நிலத்தலைவன்]

வைத்தியத்தை ஆபரேஷன் மூலம் குணப்படுத்தக் கூடுமா என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்ட பிரெஞ்சு விஞ்ஞானிகள் அதில் பிரமிக்கத்தக்க வெற்றி பெற்றிருக்கிறார்கள். இந்த ஆபரேஷன் பெயர் அன்ஸ்டோமோஸிஸ் என்பதாம். இந்த ஆபரேஷன் செய்யும்போது, மூளைக்குப் போகும் ரத்தம் கட்டுப்படுத்தப் படுவதால், இதை மிகவும் ஜாக்கிரதையாகச் செய்யவேண்டுமாம். ஆர்டெரி இரத்தக் குழாயையும, வெய்ன் இரத்தக் குழாயையும் ஒன்றாக இணைக்கும் இந்த ஆபரேஷன் மிகத் திறன்பெற்ற மருத்துவர்களால் மட்டுமே வெற்றிகரமாக நடத்தப்படும் என்று கூறப்படுகிறது. ஒன்பது மாதங்களுக்கு முன் இந்த ஆபரேஷன் செய்துகொண்டவர்கள், இப்போது பித்தம் தெளிந்து நன்கு வாழ்வதாகச் சொல்லபபடுகிறது.

* * *

இரத்தம் கட்டிப்போவதைத் தடுக்க ட்ரொமெக்ஸான் என்ற ஒரு புதுவகை மருந்தைக் கண்டுபிடித்திருப்பதாக அமெரிக்க இருதய நோய்க் கழகம் அறிவிக்கிறது. இந்த நோய்க்கு இதுவரை பயன்படுத்தப்பட்டு வந்த மற்ற எல்லா மருந்துகளையும்விட இது அதிக வேகமாகவும், வெற்றிகரமாகவும் வேலை செய்கிறதாம்.

* * *

வெனிசுவேலாவைச் சேர்ந்த மிஸ் அன்னு லூய்ஸா பிரேஞ்சர் என்ற ஓர் இளம்பெண் இலேசான விமானங்கள், பறக்கும் உயரத்திற்கு ஒரு 'ரிகார்ட்' ஏற்படுத்தியுள்ளார். 125 குதிரைச் சக்தி கொண்ட ஸூபர் பைபர் கப் (Super Piper Cub) பில் ஏறி, வாஷிங்டன் உயரத்திற்கு 26,802 அடி மேலே பறந்திருக்கிறார் என்று செயதிகள் கூறுகின்றன. இந்தப் பெண்ணின் திறமையைக் கண்டு மற்ற விமானிகள் வியப்பு அடைந்திருக்கிறார்கள். இதுவரையில் 25,000 அடி உயரம் வரையில் தான் பறந்திருக்கிறார்கள். 25,000 அடி உயரதிற்குப் பறந்தவர் ஜோன் லெடுகே என்ற பிரெஞ்சுக்காரர். அவர் பறந்ததைவிட 1802 அடி அதிக உயரதிற்கு இந்த வெனிசுவெலா வனிதை பறந்திருக்கிறாள்!

* * *

ஒலி அலைகளைக் கொண்டு துணி வெளுக்க முடியும் என்று லண்டன் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். மக்கள் காதுகளுக்குக் கேட்காத அவ்வளவு நுணுக்கமான ஒலி அலைகளைக் கொண்டு துணிகளை வெளுக்கலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த அலைகளின் உதவியைக் கொண்டு துணிகளுக்குச் சாயம் ஏற்றவும் முடியும் என்று கூறப்படுகிறது.

* * *

பருத்திச் செடிகளுக்கு எவ்வித ஆபத்தும் வராமல் அவற்றோடு வளர்ந்துள்ள இதர புல் பூண்டுச் செடிகளை மாத்திரம் பட்டுப்போகச் செய்வதற்காக ஒரு புது மருந்தை நியூயார்க்கில் கண்டுபிடித்திருக்கிறார்களாம். இதற்கு 'டினைட்ரோ' என்று பெயராம். இம்மருந்து பலனளிக்காமல் போனால் புல் பூண்டுகளை வளரவிடாமல் செயய உபயோகிப்பதற்கான மற்றொரு ரசாயனப் பொருளைக் கண்டுபிடிட்பதற்காகவும் நியூயார்க்கில் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

* * *

புதிதாகச் செய்யப்பட்டுள்ள ஒருவிதச் செயற்கை நாரினால் தயார் செய்யப்படும் துணி ஈரத்தினால் சிறிதும் பாதிக்கப்படுவதிலலை என்பதை டுபாட்ன் என்னும் அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். இத்துணியினால் செய்யப்படும் காலசட்டை, மேல்சட்டைகள் மழையில் நனைந்தாலும் சுருங்கிக் கெடுவதில்லை. சலவையில் செய்துள்ளபடியே மடிப்புகள் கலையாது, சுருங்காது இருக்கும். இத் துணி ஸம்பந்தமாகப் பலவிதப் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

பின்னல் வேலைகளுக்கும் இதை உபயோகிக்கலாம் என்று கூறப்படுகிறது. ரஸாயன ரீதியாய் இதற்கும் நைலான் என்ற பொருளுக்கும் சம்பந்தம் இல்லையாம் இந்தப் புதிய பொருளுக்கு டாக்ரான் பாலியஸ்டர் நார் என்று பெயர். இத்துணியினால் முதல்தரமான மழை கூட்டுகள் தயார் செய்யப்படுகின்றன.

* * *

புற்றுநோயால் சருமத்தில் தோன்றும் க்ஷயம், எக்ஸீஷா முதலிய சரும நோய்களைக் குணப்படுத்தும் மருந்து ஒன்றை வியாசெஸ்லாவ் கேஸ்டாபெவ் என்ற ரஷ்யடாக்டர் கண்டுபிடித்திருப்பதாக ரஷ்யப் பத்

திரிகை ஒன்று கூறுகிறது. இதை நோயுள்ள இடத்தில் இன்ஜெக்ஷன் செய்துவிட்டால் நோய்கண்ட இடம் காய்ந்து உதிர்ந்துவிடுகிறதாம். இதைக் கண்டுபிடித்தவர் ஜெக்-ருமேனிய எல்லையருகே உள்ள ஒரு நகரில் வசிப்பதாகவும், இவர் 'ஸ்டாலின் பரிசு' பெற்றவர் என்றும் அப்பத்திரிகை கூறுகிறது. இவர் கண்டுபிடித்துள்ள மருந்துக்கு 'ஜீவதுளி' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

* * *

இன்னும் பத்து வருஷங்களில் பூமியைச் சுற்றி 25,000 மைல்கள் தூரத்தில் சிறுசிறு கிரகங்களை ஏற்படுத்தி அவைகளும் பூமியோடு சுற்றும்படி விஞ்ஞானிகள் செய்வர் என்றும், இவை பூமியிலிருந்து பிரயோகிக்கப்பட்டு விஞ்ஞானிகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருக்கும் என்றும், ஆஸ்திரேலிய விஞ்ஞானி (Dr. T. F. Martin) டாக்டர் டி. எப். மார்டின் என்பவர் ஆஸ்திரேலிய-நியூஜிலாந்து விஞ்ஞானப் பத்திரிகையில் வெளியிட்டு இருக்கிறார். (Australia-Newzealand Scientific Paper)

பூமிக்கு 25,000 மைல் தூரத்தில் சுற்றிலும் மின்சார சக்தி கலந்த ஹைட்ரஜன் இருந்து வருகிறதாம். புது கிரகங்கள் இந்த வாயு உள்ள இடத்தில் தங்கச் செய்யப்படுமாம். இந்தச் செயற்கைக் கிரகங்களில் பூமிக்குத் தகவல்களைத் தெரிவிக்கக் கூடிய சாதனங்கள் வைக்கப்பட்டிருக்குமாம்.

இந்தக் கிரகங்கள் இராணுவ முக்கியத்வம் வாய்ந்தவையாயும் இருக்குமாம். இந்தக் கிரகங்களில் டெலிவிஷன் சாதனங்கள் அமைத்துவிட்டால் உலகில் உள்ள எந்தப் பாகத்தில் என்ன நடைபெறுகிறது என்பதைப் படம் பிடிப்பதுபோலப் பார்த்து அறிய முடியுமாம்.

* * *

பாலை ஒரு வருடம் வரை கெட்டுப்போகாமல் பாதுகாக்கக்கூடிய முறையை டாக்டர் கிரேவ்ஸ் என்ற அமெரிக்கர் கண்டுபிடித்திருப்பதாகவும், உலகம் முழுவதிற்கும் பாலை ஏற்றுமதி செய்யக்கூடும் என்று அமெரிக்கா எதிர்பார்ப்பதாகவும் புனா விஞ்ஞானி ஜோஷி என்பவர் குறிப்பிட்டு தாம் வேறு ஒரு வழி கண்டுபிடித்திருப்பதாகவும் கூறினார். அவரது புது முறையாவது ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பாலைக் கொதிக்க வைத்து பிறகு ஒரு குறிப்பிட்ட அளவு குளிர வைத்து மீண்டும் ஒரு குறிப்பிட்ட அளவிற்குக் கொதிக்க வைத்து, காற்று புகாதபடி டப்பாக்களில் அடைக்கவேண்டும். இந்தியாவில் பால் பஞ்சத்தை நீக்க இம் முறை ஒரு நல்ல மாற்று என்று பேராசிரியர் ஜோஷி கருதுகிறார்.

* * *

இத்தகைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் நாள்தோறும் செய்தித் தாட்களில் வந்த வண்ணமுள்ளன. அவைகளை எல்லாம் படிக்கக்கூடிய வசதிகள் பெற்றுள்ளார் சிலரே, படித்துச் சிந்தனை செய்வோர் மற்றும் ஒருசிலரே. அவைகளைப்போல் நாமும் நானிலம் புகழப் புதுக் கருவிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என எண்ணுவோர் மிகச்சிலரே! இத்தகைய சூழ்நிலையில் மேனாட்டில் மெத்தவளர்ந்து வரும் இந்தப் புத்தம்புதுக் கலைகள் பற்றியாவது பாமர மக்கள் அறியவேண்டாமா? நம்மால் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும், கண்டுபிடித்தவைகளைப் பற்றிக் குறை கூறவும், 'இவை அந்தக் காலத்து இல்லாதவையா?'' என்று குதர்க்கவாதம் புரியவும்தான் கற்றுக் கொண்டுள்ளனர் சிலர்.

''அகல்விளக்கைத் தாண்டி அரிக்கன் விளக்குகூட, நம் நாட்டவர்களின் சொந்த மூளையிலே வந்ததாகக் கூற முடியவில்லை. இது குறித்து வெட்கமோ வேதனையோகூடத் தோன்றவில்லை நம் நாட்டவர்களுக்கு என்றால் நாம் என் செய்வது!'' என்று அறிஞர் அண்ணா அடிக்கடி குறிப்பிடுவதைப்போல், நம் நாட்டினர் விஞ்ஞானத் துறையில் குறிப்பிடத்தக்க பங்கு பெறவில்லை, அதுமட்டுமல்ல விஞ்ஞானத்தின் திறமையைக்கூட முழுதும் உணர்ந்தவர்கள் ஒருசிலர்தான் நாட்டில் உலவுகின்றனர். விஞ்ஞானத்தின் இதர சாதனைகள் எல்லாம் இருண்டவீடாகவே இருக்கின்றன, நம் நாட்டின் பெரும்பான்மையான மக்களுக்கு. அரசாங்கத்தார் விஞ்ஞான வளர்ச்சிக்கோ, ஆராய்ச்சிக்கோ எத்தனை சிறிய அளவு ஆதரவு நல்குகிறார் என்பது நாடறிந்த தொன்றும்... ஆட்சித்தலைவர்கள் முதல் காங்கிரஸ் கனங்கள்வரை 'சோமநாதர் ஆலய வைபவத்தில் பங்கு கொள்கிறார்கள்; அல்லது துளசிச் செடி நடுகிறார்கள்; தூபதீப நைவேதனை செய்து கப்பல்களை மிதக்கவிடுகிறார்கள். இந்த நிலையில் விஞ்ஞானத்தின் சாதனைகள்பற்றி விளக்கமாக எடுத்துரைக்கவும் அவைகளைப் பயன்படுத்திக்கொள்ளவும் முடியுமா!

நம் நாட்டின் கிராமங்களில் மின்சார விளக்குகள் கிடை

(14-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

சென்னை 17—11—51 சனிக்கிழமை

குற்றவாளி யார்?

ஆறடி நீளம், அரையடி அகலம் கொண்ட 'பிரமாண்டமான'' ஒரு பாலத்தைத் திறந்துவைப்பது!

இருபத்தெட்டு அல்லது முப்பத்தாறு புத்தகங்கள் கொண்ட ஒரு "மாபெரும்" நூல் நிலையத்தைத் திறந்துவைப்பது!

மருந்தும் இல்லாமல் டாக்டரும் இல்லாமல் வைத்தியம் செய்யக் கூடிய "அற்புதமான" கிராமவைத்தியசாலைகளைத் திறந்துவைப்பது!

சேர்ந்தாற்போல இரண்டு ஒற்றை மாட்டு வண்டிகள் கூட ஒன்றன்பக்கம் ஒன்றாகப் போகமுடியாதபடி அமைக்கப்பட்ட "மகத்தான" ரோடுகளைத் திறந்து வைப்பது!

கிராமவாசிகள், தாங்களாக, தங்களுடைய சொந்தச் செலவில் கட்டிமுடித்த பள்ளிக்கூடக் கட்டிடத்தை, அவர்கள் வாங்கிக்கொடுக்கும் வெள்ளிச்சாவிமூலம் தாங்கள் கட்டிமுடித்தது போலத் திறந்து வைத்துவிட்டு வந்துவிடுவது!

சங்கீத சபாக்கள், நாட்டியக் கழகங்கள், முதலான மேல்சாதி வகுப்பாரின் உல்லாச சங்கங்களைத் திறந்துவைப்பது!

இப்படிப்பட்ட சீரும் சிறப்பும் வாய்ந்த திறப்புவிழா நிகழ்ச்சிகளைத்தான் நமதுடைய மதிப்பிற்குரிய இராமராஜ்ய அமைச்சர்கள் இதுவரை நடத்திவைத்திருக்கிறார்கள்.

திறப்புவிழாக்களை நடத்தி நடத்திச் சலிப்பு ஏற்பட்டுவிட்டது போலிருக்கிறது இந்த மகாகனம் பொருந்திய மந்திரிமார்களுக்கு! இப்போது, மூடுவிழாக்கள் பலவற்றை மிக வேகமாக நடத்தத் தொடங்கியிருக்கிறார்கள்.

அவர்கள் நடத்தத் தொடங்கியிருக்கும் மூடுவிழாக்களிலே மிகவும் முக்கியமானதும் முதலாவதுமாக இருப்பது, இந்த ஆண்டுமுதல் 289 கிராமவைத்தியசாலைகளை மூடிவிடுவது என்று அவர்கள் தீர்மானித்து இருப்பதுதான்.

இந்தியாவின் ஆத்மா கிராமங்களில்தான் இருக்கிறது என்று அவர்கள் பேசாதநாள் கிடையாது.

இந்தியாவில் இருக்கும் ஏழு லட்சம் கிராமங்களும் ஏழு லட்சம் வைரங்கள் என்று அவர்கள் கூறாத மேடை கிடையாது.

இந்தியாவின் உயிர்நாடி கிராமப் பகுதிதான் என்று அவர்கள் சொல்லிக்காட்டாத வேளை கிடையாது.

கிராமங்களின் நிலையை உயர்த்துவதுதான் எங்கள் கட்சியின் முதற் பெரும் நோக்கம் என்று அவர்கள் பெருமை பேசாத சமயம் கிடையாது.

கிராமவாசிகளிடத்திலே எங்களை விட அதிகமாக அக்கறை கொண்டவர்கள் யார் இருக்கிறார்கள் இந்த நாட்டிலே என்று அவர்கள் அதிர்வேட்டுப் போடாத நேரம் கிடையாது.

ஆனால் செயல் துறையில் கிராமவாசிகளையும் கிராமங்களையும் முற்றிலும் மறந்துவிட்ட மகானுபாவர்களும் அவர்களைப் போன்றவர்கள் வேறு கிடையாது.

பெரும்பாலான கிராமங்களிலே, கல்வி ஒளியைப் பரப்ப ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் கிடையாது.

பள்ளிக்கூடங்கள் இருக்கும் இடங்களிலே, அவற்றிற்குத் தகுதியான கட்டிடங்கள் கிடையாது.

கட்டிடங்கள் இருந்தாலும் தகுதி படைத்த ஆசிரியர்கள் கிடையாது.

ஆசிரியர்கள் இருந்தாலும், பள்ளிக்கூடம் செல்லவேண்டிய வயது படைத்த சிறுவர்கள் அனைவரும் பள்ளிக்குச் சென்றாக வேண்டும் என்பதற்குரிய கட்டாயக் கல்வித் திட்டம் கிடையாது.

மக்கள் போகவர ஒழுங்கான பாதைகள் கிடையாது.

வண்டிப் போக்குவரத்துக்கு ஏற்ற சாலைகள் கிடையாது.

பாதைகளிலும் சாலைகளிலும் இரவு நேரத்தில் வெளிச்சம் தரும் விளக்குகள் கிடையாது.

ஐந்தாவது வகுப்புவரை படித்து விட்டு நின்றுவிட்டவர்கள் தங்கள் படிப்பை மறவாமல் காப்பாற்றிக்கொள்வதற்குத் தேவையான வசதிகளில் எதுவும் கிராமங்களில் கிடையாது.

நூல் நிலையம் கிடையாது.

வாசகசாலை கிடையாது.

தப்பித் தவறி நூல்நிலையங்களோ வாசகசாலைகளோ இருந்துவிட்டால், அவற்றில் சிறந்த புத்தகங்களோ நல்ல பத்திரிகைகளோ கிடையாது.

பெரும்பாலான கிராமங்களிலே, ஆஸ்பத்திரிகள் கிடையாது.

ஆஸ்பத்திரிகள் இருந்தாலும் அவற்றிலே தேவையான மருத்துவக் கருவிகள் இருக்கமாட்டா.

தப்பித் தவறி மருத்துவக் கருவிகள் இருந்துவிட்டாலும் மருந்துகள் இருக்கமாட்டா.

ஒருவேளை மருந்துகள், மருத்துவக் கருவிகள் இவை இரண்டும் இருந்துவிட்டாலும் டாக்டர் இருக்கமாட்டார்—ஆஸ்பத்திரி பூட்டப்பட்டிருக்கும்.

நோய் வந்தால் தீர்த்துக்கொள்ள வசதி எதுவும் கிடையாது.

ஏறத்தாழ எல்லா கிராமங்களிலுமே மின்சார வசதி கிடையாது.

உலக விவகாரங்களைத் தெரிந்துகொள்ள ரேடியோ கிடையாது.

உழவுத் தொழிலை நவீன முறையில் நடத்த இயந்திரக் கலப்பைகள் கிடையாது; இயந்திர அறுவடைக் கருவிகள் கிடையாது; இயந்திரத்தின் மூலம் விதை தூவும் கருவிகளும் கிடையாது.

சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பெரும்பாலான கிராமங்களின் பரிதாபகரமான நிலைமை இது.

இந்த நிலைமையைக் கண்டு எவரும் வருந்தாமல் இருக்க முடியாது.

இந்த நாடு விவசாய நாடு. எனவே கிராமங்கள்தான் இந்த நாட்டின் நாடி நரம்புகள் போன்றவை.

அந்த நாடி நரம்புகளோ இவ்வளவு கேவலமான நிலையில் இருக்கின்றன.

நெஞ்சை நோகவைக்கும் சம்பவம் இதைவிட வேறு இருக்க முடியாது.

ஒவ்வொரு கிராமமும் ஏறத்தாழ ஒவ்வொரு இருட்குகையாக இருந்துவருகிறது.

இப்படிப்பட்ட நிலையிலே, அத்தி பூத்தாற்போல, ஏதோ சிற்சில கிராமங்களில் மட்டும், கிராம வைத்தியசாலைகள் என்று சில அமைப்புகள் இருந்துவருகின்றன.

தலைவலி, காய்ச்சல், வயிற்று வலி முதலான சில்லறை நோய்களைத்தான் அந்த வைத்தியசாலைகளால் தீர்த்துவைக்கமுடியும். கடுமையான நோய்களைப்பற்றி அவை கருதவும் முடியாது.

அவற்றால் மிக அதிகமான பலன் விளைகிறது என்று யாரும் கூற முடியாது என்றபோதிலும், அவற்றாலும் ஓரளவு பலன் விளைகிறது என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

அப்படிப்பட்ட மருத்துவச்சாலைகளில்தான் 285-ஐ இந்த ஆண்டு முதல் மூடிவிடுவது என்று முடிவு செய்திருக்கின்றனர் சென்னை ஆட்சியாளர்கள்.

ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு ஆஸ்பத்திரி என்றமுறையில் எல்லாக் கிராமங்களிலும் ஆஸ்பத்திரியைத் தொடங்கவேண்டியது ஆட்சியாளர்கள் கடமை. ஆனால் இவர்களோ, புதிய ஆஸ்பத்திரிகளைத் தொடங்கவில்லை என்பது மட்டுமல்ல, ஏற்கெனவே இருந்துவரும் ஆஸ்பத்திரிகளிலேயே 285-ஐ அந்த ஆண்டு முதல் மூடிவிடும்படி உத்திரவிட்டிருக்கின்றனர். வெந்த புண்ணிலே வேலை நுழைப்பது போன்ற கொடுமை இது.

கிராமங்கள்தோறும் ஆஸ்பத்திரிகளைத்தொடங்கவேண்டியது ஆளவந்தார்களின் கடமை.

ஆனால் அவர்களோ இருக்கும் ஆஸ்பத்திரிகளையும் மூடத்தொடங்குகிறார்கள்.

அவர்கள் செய்யவேண்டியது ஆஸ்பத்திரித் திறப்பு விழா.

ஆனால் அவர்கள் செய்துகொண்டிருப்பதோ ஆஸ்பத்திரி மூடுவிழா.

ஆனால்கிராமசேவைசெய்வதிலே எங்களுக்கு ஈடு யார் உண்டென்று அடிக்கடி பேசுகிறார்கள் இந்த ஆளவந்த அருங்குணவான்கள்.

கிராமவாசிகளுக்கு ஏற்கெனவே கிடைத்துவரும் வைத்திய வசதியையும் இல்லாமற் செய்துவிடுவதற்குப் பெயர்தான் கிராமசேவை என்று இவர்களுடைய இராமராஜ்ய அகராதி கூறுகிறதுபோலும்!

289 வைத்தியசாலைகளை இவர்கள் இந்த ஆண்டு முதல் மூடிவிட முடிவு செய்திருக்கிறார்களே இந்த அற்புதமான முடிவுக்கு உரிய அருமையான காரணம் என்னவாம் தெரியுமா?

அந்த வைத்தியசாலைகளிற் பணியாற்றுவதற்கு டாக்டர்கள் முன்வர மறுக்கிறார்களாம்!

ஆகவேதான் ஆஸ்பத்திரிகளை அவசரம் அவசரமாக இழுத்துச் சாத்திப் பூட்டுகிறார்களாம் இந்த ஆட்சியாளர்கள்.

குண்டூரிலே சென்று இந்தக் குண்டுமணி போன்ற வாசகத்தைத் தந்திருக்கிறார் சென்னை சுகாதார அமைச்சர் தோழர் காளாவெங்கட்ராவ்.

டாக்டர்கள் முன்வர மறுக்கிறார்களாம் இந்த வைத்தியசாலைகளிற் பணியாற்ற!

ஆமாம்! உண்மைதான்! டாக்டர்கள் மறுக்கத்தான் செய்கிறார்கள்!

ஆனால், ஏன் மறுக்கிறார்கள்? அந்தக் கேள்வியைக் கேட்டால் அல்லவா அவர்கள் மறுப்பதற்குரிய காரணம் கிடைக்கும். கேட்

(14-ம் பக்கம் பார்க்க)

தோழர் மோகன்—தோழியர் கௌரி

வைதீகர்களின் முணுமுணுப்பு, சனாதனிகளின் சலசலப்பு, முதியவர்களின் முரட்டுப் பார்வை, பழமைப் பற்றாளரின் உருட்டு விழிகள், உறவினர் சிலரின் முட்டுக்கட்டை இவ்வளவு எதிர்ப்புகளையும் தூள்தூளாக்கிவிட்டு, காதல் பாதையில் வெற்றி கண்ட இச் சீர்திருத்தத் தம்பதிகளின் திருமணம், 11-11-51 அன்று சென்னை ஒற்றைவாடை மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமையில், தோழர்கள் என். வி. நடராசன், காஞ்சி மணிமொழியார், க. அன்பழகன், கவிஞர் கண்ணதாசன், ஆகியோர் தம்பதிகளைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கினர்.

எதையும் நம்பும் இதயங்கள்

திருவண்ணாமலையில் பல ஆண்டுகளாக இருந்துவந்த ரமண மகரிஷி இன்று மரணமடைந்த அதே வினாடியில் வானத்தில் ஒளி பொருந்திய வால் நட்சத்திரம் ஒன்று தோன்றி கீழே விழுவதுபோல் மறைந்துவிட்டது. தேவ தூதர்கள்—திருஅருள் பெற்றவர்கள்—ஆண்டவனால் அனுப்பப்பட்டவர்கள் — அவன் அவதாரம் போன்றவர்கள்—மகான்கள்—மகத்தான யோகிகள் போன்றவர்கள் மரணமடைகிற போது, வானத்தில் வால் நட்சத்திரங்கள் விழுவது வாடிக்கை. எனவேதான் பகவான் ரமணர், இறைவன் திருவடி நிழலில் இரண்டறக்கலந்த வேளையிலும், வானத்தில் வால் நட்சத்திரம் தோன்றி, அவருடைய மரணச் செய்தியை உலகுக்கெல்லாம் தெரிவித்திருக்கிறது.

* * *

மனிதர்களுக்கு மட்டுமல்ல— மிருகங்களுக்கும் பறவைகளுக்கும்கூட எல்லாம் வல்ல எம்பிரானிடம் பக்தியும் பாசமும் ஏற்படுவதுண்டு என்பதை சென்னை கச்சாலேஸ்வரர் ஆலயத்தில் சென்ற சில நாட்களாகத் தொடர்ந்து நடந்துவரும் ஒரு நிகழ்ச்சி தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டது. கடந்த பத்து நாட்களாக, ஒரு சேவல் நாள்தோறும், ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்யப்படும் வேளையைப் பார்த்து, மேற்படி கோவிலுக்குள் நுழைகிறது. நுழைந்து, நேரே ஆண்டவன் சந்நிதி அருகே சென்று, பயபக்தியோடு சிறிது நேரம் அமர்ந்து, ஆண்டவனைத் தியானித்துவிட்டு, பிறகு, வந்த வழியே சென்றுவிடுகிறது. என்னே சேவலின் பக்தி! என்னே அதன் தியான மகிமை!

* * *

திருவிதாங்கூர் பகுதியைச் சேர்ந்த சபரிமலை என்னும் இடத்தில் உள்ளதும், அனைத்திந்தியாவிலும் பெரும்புகழ் பெற்றதுமான ஐயப்பன் கோவிலில், ஆண்டவன் சந்நிதானத்திற்கு எதிரே, முந்தநாள், நாகப்பாம்பொன்று, தலையைச் சாய்த்து நின்று, ஆண்டவனை நோக்கிப் பிரார்த்தனை புரிந்துகொண்டிருந்தது. பக்தர்களெல்லாம் அந்தப் பாம்பைக் கண்டு பயப்படுவதைக் கண்ட கோயில் அதிகாரி, நாகத்தின் அருகே சென்று, "நாகமே—பக்தர்களையெல்லாம் இப்படிப் பயப்படவைக்கிறாயே, இது நியாயமா?" என்று பணிவன்புடன் விசாரித்தார். அவ்வளவுதான். பாம்பு, அவருடைய கட்டளையை அன்புடன் ஏற்றுக் கொண்டு, தன் புற்றை நோக்கிச் சென்றுவிட்டது. பக்தர்களின் பிரார்த்தனைக்கு இடையூறு செய்யக்கூடாது என்பதிலே அந்த நாகத்திற்கு இருக்கும் அக்கறையைக்கண்டு சபரிமலை வட்டாரமே வியப்புக்கடலில் மூழ்கிவிட்டது.

* * *

ஆந்திரநாட்டில், முனிகொண்டா என்னும் ஊரில், ஆதித்திராவிடச் சிறுவன் ஒருவன், தன்னிடமிருக்கும் மந்திர சக்தி மூலம், தீராத வியாதிகளையெல்லாம் தீர்த்துவைக்கத் தொடங்கியிருக்கிறான். வெகு தொலைவில் இருந்தெல்லாம்கூட, மக்கள், இந்த மகத்தான அருள் பெற்றவனைத் தரிசித்து, தங்கள் கர்மநோய் போக்கிக் கொள்வதற்காக முனிகொண்டாவை நோக்கிக் கூட்டம் கூட்டமாக வந்து குவிந்தபடி இருக்கின்றனர்.

* * *

ஒரிசா மாகாணத்தில் நாந்தலை என்ற பகுதியில் கோபாளி பாபா என்னும் பெயர் படைத்த ஏழு வயது சிறுவன் தெய்வீக அருள் பெற்றவனாகவும், தேவ தூதனாகவும் காணப்படுகிறான். அவனுடைய தரிசனம் பெற்ற அளவிலேயே நோயாளிகளின் நோய்களெல்லாம் கதிரவன் முன் கரைந்துபோகும் பனி போல இருந்த இடம் தெரியாமல் பறந்துவிடுகின்றன. அந்தத் "தேவாதி தேவனை"க் காண்பதற்காக, மக்கட்கடல், நாந்தலை வட்டாரத்தில், இலட்சக் கணக்கில் அலைமோதிக் கொண்டிருக்கிறது. வடநாடு முழுவதுமிருந்து, பக்தர்கள், குடும்பம் குடும்பமாக ஒரிசாவில் குவிந்துகொண்டிருக்கின்றனர். இதற்கென்றே விசேஷ ரயில்களும் பஸ்களும் விடுவதற்கு ஒரிசா ஆட்சியாளர்கள் ஏற்பாடு செய்திருக்கின்றனர். கோபாளி பாபாவைக் காண்பதற்காக இதுவரை வந்து திரண்டுள்ள கூட்டமே ஏழெட்டு இலட்சமிருக்கும். மக்கள் இன்னமும், வந்தது வந்தபடியே இருக்கின்றனர்.

* * *

நெல்லை-திருச்செந்தூர் ரயில்வே பகுதியில், குரும்பூர் ஸ்டேஷனிலிருந்து அரை மைல் தொலைவில் உள்ள நாலுமாவடி கிராமத்தில், பால்ராஜ் என்னும் 9 வயதுள்ள கிருஸ்துவ சிறுவன் எல்லா நோய்களையும் குணப்படுத்தும் அதிசய மருந்து கொடுப்பதாகப் பல ஜாதிகளையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் மேற்படி கிராமத்தில் குழுமிய வண்ணமிருக்கின்றனர். நமது நிருபர் சென்று பார்த்த சமயம் சுமார் 10,000 மக்கள் வந்திருந்தார்கள். சிறுவன் முள்ளுமுருங்கையால் தட்டுகிறான். அவ்வளவுதான் எப்படிப்பட்ட நோயும் மறைந்துவிடுகிறது. கடந்த இரண்டு வாரங்களில் கூட்டம் வர வர அதிகரித்து வருகிறது.

* * *

இந்த நாட்டுத் தேசிய ஏடுகளில், அதிசய சம்பவங்கள் என்கிற தலைப்பின் கீழ் அடிக்கடி வெளியிடப்பட்டு வருகின்ற செய்தித் துணுக்குகளிற் சிலவே, மேலே தரப்பட்டிருப்பவை.

நம் மக்களின் உள்ளத்தில், மூட நம்பிக்கை, எவ்வளவு அழுத்தந் திருத்தமாகப் பதிந்துவிட்டிருக்கிறது என்பதைத்தான் மேலே தரப்பட்டுள்ள பத்திரிகைச் செய்திகள் நமக்குத் தெள்ளத் தெளிய எடுத்து விளக்குகின்றன.

இந்த "அதிசய சம்பவங்கள்" ஒவ்வொன்றும் உண்மையில் "அதிசய சம்பவங்கள்" அல்ல. பொதுமக்களின் அறியாமையை அடிப்படையாக வைத்து, அதன் மீது, தங்களின் சுயநல வாழ்க்கை என்னும் சுகபோக மாளிகையை எழுப்ப எண்ணுகின்ற சமுதாய விரோதிகளின் கற்பனைக் கதைகளே இந்த "அதிசயசம்பவங்கள்"

இந்த "அதிசய சம்பவங்கள்" ஒவ்வொன்றும் பத்திரிகையில் வெளியான சிலநாட்களுக்குள்ளாகவே, இச்சம்பவங்களின் பொய்மையும் புரட்டும் பொது மக்களுக்குத் தெள்ளத் தெளிய விளங்கிவிட்டிருக்கிறது.

ஒவ்வோர் அதிசய சம்பவத்தின் சாயமும் உடனுக்குடன் வெளுத்து விட்டிருக்கிறது. ஒவ்வொரு சம்பவமும் ஒவ்வொரு கற்பனை அல்லது புரட்டு அல்லது பொய் அல்லது பித்தலாட்டம் என்பதை மக்கள், ஐயம் திரிபுஅற உணர்ந்து கொள்ளக்கூடிய சூழ்நிலை ஒவ்வொரு சம்பவம் நடந்து முடிந்த உடனேயும் ஏற்பட்டிருக்கிறது.

என்றாலும்கூட பொதுமக்கள்' ஒரு குறிப்பிட்ட அதிசய சம்பவம்' உண்மையில் அதிசய சம்பவமல்ல—புல்லர்களின் புரட்டு வித்தை என்பது தெரியவந்ததும், அந்தக் குறிப்பிட்ட சம்பவம் பொய் என்பதை மட்டும் தெரிந்துகொண்டு, தாங்கள் அந்த சம்பவத்தை உண்மை என்று நம்பி ஏமாந்து போனதற்காக வருத்தமடைகிறார்களே தவிர, அதே போன்ற வேறோர் பொய், அதிசய சம்பவம் என்கிற மூலாம் பூசப்பட்டு, மறுபடியும் அவர்கள் முன்னால் கொண்டு வந்து நிறுத்தப்பட்டால், இந்தப் புதிய பொய்யைக் கண்டு, நிச்சயம் ஏமாந்துதான் போகிறார்கள். எத்தனை முறை ஏமாந்தாலும், பொதுமக்கள், ஒவ்வொரு "புதிய அதிசயம்" தோன்றுகிற போதும், இந்தப் புதிய அதிசயம், பழைய அதிசயங்களைப் போலப் பொய்யாக இராது — உண்மையாகவே இருக்கும் என்று தவறாக எண்ணிக்கொண்டு, மீண்டும் மீண்டும் ஏமாறுகிறார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்து மக்களின் உள்ளத்தைப் பன்னெடுங் காலமாகப் பற்றிப் படர்ந்திருக்கும் பழம் பெரும் நோய் மூடநம்பிக்கை. ஆகவேதான் அந்த நோய் விரைவில் நம் மக்களை விட்டு விலக மறுக்கிறது. சிற்சில சமயம் விலகினாலும் மீண்டும் மீண்டும் பற்றிக்கொள்கிறது.

ரமணரிஷி மரணமெய்தியதற்கும் அதே தினத்தில் வானத்தில் வால் நக்ஷத்திரம் தோன்றியதற்கும் துளியும் தொடர்பு கிடையாது — இத்தகு நக்ஷத்திரங்கள் அடிக்கடி வானத்தில் தோன்றுவது வழக்கம் தான்—ரமணர் மறைவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர்கூட இப்படிப்பட்ட ஒரு நக்ஷத்திரம் தோன்றியிருக்கிறது—அதற்கு முன் ஒரு மாதத்திற்கு முந்திகூட வால் நக்ஷத்திரம் வானத்தில் எழும்பியிருக்கிறது—எனவே இதிலே அதிசயம் எதுவும் கிடையாது என்று உதகமண்டலம் வானிலை ஆராய்ச்சிக் கழகத்தார் விஞ்ஞான அறிக்கை ஒன்றை வெளியிட்டு ரமணர் அதிசயத்தை அம்பலப் படுத்தியவுடனே, அந்த அதிசயம் அழிந்து போய்விட்டது.

அந்த அதிசயம் அழிந்ததுபோலவேதான், சென்னை கோயில் ஒன்றில் ஓர் சேவல் ஆண்டவனை நோக்கி வழிபட்டு வந்ததாகக் கூறப்பட்டுவந்த அதிசயமும், லாரி ஒன்றில் சிக்கிக்கொண்டு அந்தச் சேவல் அழிந்தவுடனே, தானாக அழிந்துபோய்விட்டது. உண்மையிலேயே அந்தச் சேவல் தெய்வ அருள் பெற்றதாக இருந்தால், கேவலம் மனிதனால் செய்யப்பட்ட லாரியில் சிக்கிக்கொள்வதால் சாகக்கூடாதல்லவா? ஆனால் உண்மையில் சேவல் செத்துத்தான் போயிற்று. ஆகவே அந்த அதிசய சம்பவமும் மரணப் பள்ளத்தில் வீழ்ந்து மடிந்துதான் போயிற்று.

சபரிமலை அய்யப்பன் ஆலயத்தில், தங்கள் கட்டளைக்கிணங்கி, ஓர் நாகம், வந்தவழியே திரும்பிச் சென்றுவிட்டது என்று பத்திரிகைகளில்வெளிவந்தசெய்தி முற்றிலும் பொய்யானது — அப்படிப்பட்ட சம்பவம் எதுவும் நடக்கவேயில்லை என்று அந்தக் கோயில் அதிகாரிகளே பிறகு அறிக்கை வெளியிட்டுவிட்டனர்.

ஆந்திரநாட்டு ஆதித்திராவிடச் சிறுவனும், ஒரிசா மாகாணத்து "தேபான பாபா" சிறுவனும், எல்லா நோய்களையும் தீர்க்கவல்ல மந்திரசக்தி பெற்றிருக்கின்றனர் என்று தேசிய ஏடுகளிலே அதிசயச் செய்தி வெளிவந்தது. ஆனால் அந்த இரண்டு வட்டாரங்களிலும், அந்தச் சிறுவர்களைத் தரிசிப்பதற்காக வந்துகூடிய கூட்டத்திலேயே, காலராவும் பிளேக்கும் பரவியபோது, அந்தச் சிறுவர்களால் அந்த நோய்களைத் துளியளவும் தடுக்க முடியவில்லை, அதிசய சக்தி அந்தச் சிறுவர்களிடம் துளியளவும் கிடையாது என்கிற நல்ல உண்மை அவர்களின் இக் கையாலாகாத் தனத்திலிருந்தே திட்டவட்டமாகத் தெரிந்துவிட்டது.

காலுமாவடி கிராமத்திலிருந்து கொண்டு, எல்லா நோய்களையும், முன்னூழுருக்கையால் தட்டுவதாலேயே தீர்த்துவிடுவதாகச் சொல்லப்படுகிறான் பால்ராஜ் என்னும் 9 வயது சிறுவன். ஆனால் அந்தச் சிறுவனுக்கே தோல் வியாதி இருக்கிறதாம். அதனையே அவனால் தீர்த்துக்கொள்ள முடியவில்லையாம். அந்த வட்டாரத்துச் சுகாதார அதிகாரி இந்த உண்மையைத் தெரிவித்திருக்கிறார் தெளிவாக! தன்னுடைய நோயையே தீர்த்துக் கொள்ள முடியாதவன் பிறருடைய நோயை ஒழித்துக்கட்டப் போகிறான்! ஆகவே இந்த சம்பவமும் அதிசயமல்ல—புல்லர்களின் புரட்டு என்பது தெளிவாகத் தெரிகிறது.

இவ்வாறாக, அதிசய சம்பவங்கள் என்று சொல்லப்படுகின்ற ஒவ்வொரு சம்பவமும் உண்மையில் அதிசய சம்பவமாக இராமல், பொய்யும் புரட்டும் நிறைந்த பித்தலாட்டமாகத்தான் இருக்கின்றது.

பித்தலாட்டமாகத்தான் இருக்கிறது—இருந்தும் இதைத்தான் நம்பி ஏமாறும் முட்டாள்தனமோ, நம் மக்களைவிட்டு நீங்க மறுக்கிறது.

எதையும் கண்களை மூடிக்கொண்டு நம்பும் மூட இதயம் படைத்தவர்களாக இருக்கிறார்கள் நம் மக்கள். இந்த நிலைமை நீங்கி, எதையும் ஆராய்ந்தறியும் பகுத்தறிவு இதயம் படைத்தவர்களாக மாறவேண்டும் அவர்கள்.

மாறவேண்டுமென்—று [illegible] திராவிட இயக்க இளைஞர்கள்,

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமானால் அரிசி விலை ஏற வேண்டும் — ஆம்! உயர்ந்தே போக வேண்டும். ஆனால், அரிசி விலையை அதிகரிக்கத் தொடங்கினால், ஏழை வெட்டும் கருப்பண்ணனின் குடும்பம் பட்டினியால் அடைந்து அழிந்து மாண்டுவிடும். அது கூடாது.

கருப்பண்ணன் பிரார்த்தனை புரிவதும் உண்மையோடு பாவனை நோக்கித்தான்.

ஏகாம்பரம் பிரார்த்தனை புரிவதும் அந்தப் பாதையில் சாதனை நோக்கித்தான்.

கருப்பண்ணன் கோரிக்கையும் நியாயமானது.

ஏகாம்பரத்தின் கோரிக்கையும் நியாயமானது.

கருப்பண்ணனின் கோரிக்கையை நிறைவேற்றி விட்டால் அவன் குடும்பம் வேதனைப்படும். அது நிச்சயம்.

ஏகாம்பரத்தின் வேண்டுகோளை அலட்சியப்படுத்தினாலும், அவன் வாழ்வு வேதனைக் குளமாகும். அதுவும் நிச்சயம்.

கருப்பண்ணனின் உள்ளம் மாசமறுவற்றது. தூய்மையானது.

ஏகாம்பரத்தின் நெஞ்சமும் பழிபாவம் அற்றது. உண்மையானது.

கருப்பண்ணனுக்கு உதவ வேண்டியது அவசியம். அதுபோலவே, ஏகாம்பரத்திற்கு உதவ வேண்டியதும் அவசியம்.

இருவருடைய பிரார்த்தனைகளும் நியாயமானவை நிச்சயம் நிறைவேற்றப்பட வேண்டியவை. ஆனால், ஆண்டவன், இருவருடைய பிரார்த்தனைகளையும் அல்ல, இருவரில் ஒருவருடைய பிரார்த்தனையைக் கூட நிறைவேற்ற முடியவில்லை. காரணம், ஒருவருடைய பிரார்த்தனை, மற்றொருவருடைய பிரார்த்தனைக்கு நேர் விரோதமானதாக இருக்கிறது. இதனால், அந்த ஒருவருடைய பிரார்த்தனையை நிறைவேற்றினால், மற்றவருக்கு, பாதகம், கஷ்டமும் ஏற்படுகிறது. பாதகமோ இருவருக்கும் ஏற்படக்கூடாது. ஏனெனில் இருவருமே மிகவும் நல்லவர்கள். இருவருடைய பிரார்த்தனையும் மிக நேர்மையானவை. ஆகவேதான் போலும், ஆண்டவன், இருவருடைய பிரார்த்தனையையுமே கவனிக்காதது போல இருந்து விடுகிறார். அப்படித்தானே இருக்கமுடியும்!

கருப்பண்ணனின் பிரார்த்தனை ஏகாம்பரத்தின் பிரார்த்தனைக்கு விரோதமாகவும், ஏகாம்பரத்தின் பிரார்த்தனை கருப்பண்ணனின் பிரார்த்தனைக்கு மாறானதாகவும் இருக்கிறது என்பது மட்டுமல்ல நம்மால் கவனிக்கப்பட வேண்டிய உண்மை. ஆண்டவனை நோக்கி அல்ல உலகத்திலும் செய்யப்படுகின்ற எல்லாப் பிரார்த்தனைகளுமே ஒரு சாராருக்கு அனுகூலமாகவும் அதே நேரத்தில் பிறிதொரு சாராருக்குப் பிரதிகூலமாகவும் தான் இருந்து வருகின்றன.

நாட்டிலே நோய்கள் அதிகமாகட்டும் என்று, வெளிப்படையாக அல்ல, மனதிற்குள்ளாகப் பிரார்த்தனை புரிகிறார் வைத்தியர். ஏனெனில் நோய்கள் அதிகமாக அதிகமாகத்தான், அவருக்கு வருமானமும் பெருகும். அவருடைய குடும்பமும் வாழும்.

ஆனால் அதே நேரத்தில் நோய்களெல்லாம் தொலைய வேண்டும் என்று நோயாளிகள் பிரார்த்தனை புரிகிறார்கள். அதற்குக் காரணம், நோய்கள் தொலைந்தால்தான் நோயாளிகளின் வைத்தியச் செலவும் குறையும். வாழ்க்கையின் வேதனையும் தொலையும்.

பண்டங்களின் விலைகளெல்லாம் யானை விலை குதிரை விலையாக உயர வேண்டும் என்று பிரார்த்தனை புரிகிறான் வியாபாரி.

அந்த விலைகளெல்லாம் தன்னால் எட்டிப் பிடிக்கக்கூடிய அளவு மிக மிகக் கீழே இறங்கி வர வேண்டுமென்று பிரார்த்தனை புரிகிறான் பாட்டாளி.

தன்னுடைய இலாபம் பெருக வேண்டும் வாழ்க்கை வசதிகள் பெருக வேண்டும் என்று பிரார்த்தனை புரிகிறான் முதலாளி.

தன்னுடைய கூலி வளர வேண்டும்; அதாவது முதலாளியின் இலாபம் குறைய வேண்டும் என்று பிரார்த்தனை புரிகிறான் தொழிலாளி.

நாட்டிலே என்றென்றும் நாலாயிரம் ஜாதிகளும் ஜாதிக்கு ஜாதி ஏற்றத்தாழ்வுகளும் இருந்தாக வேண்டும் என்று பிரார்த்தனை புரிகிறான், ஜாதி முறை இருப்பதால் பல பிரத்யேக உரிமைகளையும் சிறப்பான அதிகாரங்களையும் பெற்று வாழும் "மேல்ஜாதிக்" காரன்.

"ஜாதிபேதம் கூடாது. சிலர் மேல், சிலர் கீழ் எனும் நிலை ஆகாது" என்று உரைக்கத் தக்க சூழ்நிலை உண்டாக வேண்

இரண்டாம் பதிப்பு
தயாராகி விட்டது!
இராதாமணாளனின்
இன்சுவை ஏடு!

மனப்புயல்

அழகிய மூவர்ண அட்டைப் படத்துடன் 192 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 2—0—0

பகுத்தறிவுப் பாசறை
147, பவழக்காரத் தெரு, சென்னை-1.

டும் என்று பிரார்த்தனை புரிகிறான் சாதிபேதம் இருப்பதன் காரணமாகத் தாழ்த்தப்பட்டு ஒடுக்கப்பட்டு சமுதாயத்தின் அடித்தளத்தில் தள்ளப்பட்டுள்ள "கீழ்சாதி"க்காரன்.

மனிதனை மனிதன் வண்டியில் ஏற்றி இழுத்துச் செல்வது அக்கிரமம் — இது தொலைய வேண்டும் என்று பிரார்த்தனை புரிகிறான் ஜீவகாருண்யவாதி.

இந்த ரிக்ஷாவும் போய்விட்டால் நான் எப்படி வாழ்வது ஆண்டவனே — இந்த ரிக்ஷா என்றென்றும் இருந்து எனக்குச் சோறுபோடட்டும் ஆண்டவனே என்று வேறுவிதப் பிரார்த்தனை புரிகிறான் ரிக்ஷாத் தொழிலாளி

அணிந்து கொண்டிருப்பவர்களின் செருப்புகளெல்லாம் சீக்கிரம் கிழியவேண்டுமே என்று பிரார்த்தனை புரிகிறான், அப்படிக் கிழிவதால்தான் தன் வியாபாரம் வளரக்கூடும் என்று எண்ணுகிற செருப்புக் கடைக்காரன்.

தன் காலில் இருக்கும் செருப்பு என்றென்றும் கிழியாமல் அப்படியே இருக்கவேண்டும் என்று பிரார்த்தனை புரிகிறான், அப்படியே இருந்தால்தான் தன் செலவு அதிகமாகாமல் இருக்கும் என்று நம்புகிற செருப்பு அணிந்த தோழன்.

இந்தவிதமாக, உலகத்திலே, ஒரு சாரார், அல்லது ஒரு கூட்டத்தார், அல்லது ஓர் இனத்தார் செய்யும் பிரார்த்தனை, மற்றொரு சாரார், அல்லது மற்றொரு கூட்டத்தார், அல்லது மற்றொரு இனத்தார் செய்யும் பிரார்த்தனைக்கு நேர்மாறானதாகத்தான் இருக்கிறது.

ஆகவேதான் ஆண்டவன் எந்த ஒரு சாராரின் பிரார்த்தனையையும் நிறைவேற்றிவைப்பதில்லை. பிரார்த்தனை செய்பவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்களுடைய பிரார்த்தனை எவ்வளவு அவசியமானதாகவும் அவசரமானதாகவும் இருந்தாலும்சரி, அவர், அந்தப் பிரார்த்தனைகளுக்குச் செவி சாய்ப்பதென்பது எப்போதுமே கிடையாது.

ஆண்டவனை நோக்கிச் செய்யப்பட்ட பிரார்த்தனைகளாலே பலன் விளைந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. சாஸ்திரங்கள் செப்புகின்றன. இதிகாசங்கள் எழுதுகின்றன. கதைகளும் காவியங்களும் தெரிவிக்கின்றன. ஆனால் வரலாறு தெரிவிப்பதில்லை.

மனித சமுதாயம் ஆண்டவன் என்கிற ஒரு தத்துவத்தைக் கண்டுபிடித்த ஆதி நாள் முதல் இந்நாள் வரை, ஆண்டவனை நோக்கிச் செய்யப்பட்டிருக்கிற பிரார்த்தனைகள் கோடி கோடி கோடி கோடியாகும். ஆனால் அந்தக் கோடானு கோடி பிரார்த்தனைகளிலே ஒரே ஒரு பிரார்த்தனைக்குக்கூட, ஆண்டவன், செவி சாய்த்ததாக, பிரார்த்தனையை நிறைவேற்றி வைத்ததாக, உலக வரலாற்றிலே ஆதாரம் கிடையாது.

"ஒரு பிரார்த்தனையாவது வெள்ளத்தைத் தடுத்திருக்கிறதா? புயலை நிறுத்தியிருக்கிறதா? கடல் அலையை அடக்கியிருக்கிறதா?

"ஒரு பிரார்த்தனையாவது பஞ்சத்தைப் போக்கி, பூகம்பத்தைத் தடுத்து, எரிமலையை அடக்கியிருக்கிறதா?

"ஒரு பிரார்த்தனையாவது ஒரு துளி மழையை, கதிரவனின் ஒரு சிறு ஒளிக் கதிரை நமக்குத் தந்திருக்கிறதா?

"ஒரு பிரார்த்தனையாவது கிரபராதிகளை விடுவித்து, கொடுங்கோலர்களை ஒடுக்கி, அடிமைகளின் தளையை அறுத்தெறிந்திருக்கிறதா?

"இல்லை — இல்லை — இல்லை — என்பதுதானே இவ்வளவு கேள்விகட்கும் உள்ள பதில்!

"ஆகவேதான் நான் கூறுகிறேன் — பிரார்த்தனை புரிவதற்காக உங்கள் காலத்தை

போ பணத்தைப் போ அறிவைப் போ செலவிடுவது அறிவுடைமையாகாது."

என்று, பெரியார் அவர்கள், ஒரு முறை, அவர் ஆற்றிய சொற்பொழிவொன்றிலே குறிப்பிட்டிருக்கிறார்.

அந்தக் கருத்தை முற்றும் உண்மையானது. பகுத்தறிவாளர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது.

பிரார்த்தனை, சோம்பேறிகளின் ஆயுதம், கையாலாகாதவர்களின் முணுமுணுப்பு. மனித முயற்சியில் நம்பிக்கை அற்றவர்களின் சலசலப்பு. சோம்பேறிகளின் கடைசிப் புகலிடம்.

பிரார்த்தனை, இதுவரை, உலகத்தில், எந்தக் காரியத்தையும் சாதித்தது கிடையாது. நடக்கக்கூடாத எந்தக் காரியத்தையும் அது தடுத்து நிறுத்தியதும் கிடையாது. நடக்க வேண்டிய எந்தக் காரியத்தையும் அது நடத்திவைத்து மனித சமுதாயத்திற்கு உதவி புரிந்ததும் கிடையாது.

பிரார்த்தனை புரிவதாலே மனித சமுதாயத்திற்கு நஷ்டம் உண்டே தவிர இலாபம் கிடையாது. நஷ்டம் உண்டே தவிர களிப்புதரும் நிலைமை உருவாவது கிடையாது.

தன்னுடைய முயற்சியாலே உலக நிலையை மாற்றி அமைக்க முடியும் என்கிற உயர்ந்த எண்ணத்தை ஒழித்து, தான் ஒரு முயற்சியும் செய்யாமல், எங்கேயோ இருக்கும் ஏதோ ஓர் பரம்பொருளை நோக்கி எப்படியோ சில சொற்களை உச்சரித்துவிட்டால் போதும்,

(16-ம் பக்கம் பார்க்க)

"முருகன் என்றதுமே மோகம் பிறக்கவில்லை சந்திராவுக்கு! முகிலன் நினைவே வந்தது! முடிவு?

கன்னியின் கண்ணீர்!

டி. கெ. மூர்த்தி சித்தரித்த கதையில் காணுவீர்கள்!

விலை 8 அணா

சரோஜினி பதிப்பகம்
புதுச்சேரி.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

டாது. ஆனால் அமெரிக்காவில், ஆங்கிலநாட்டின் கிராமங்களில் டெலிவிஷனையும் காணலாம்! டெலிவிஷனை, பம்பாய்க்கு 1952-ல் வரப்போகிறது. பம்பாய் டெலிவிஷனைக் காணவே 1952 வரை காத்துக்கிடக்கிறது என்றால், சென்னை எதுவரை காத்துக்கிடக்க வேண்டுமோ, யார் கண்டது?

பள்ளிகளிலோ, கல்லூரிகளிலோ மாணவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட பகுதிதான் விஞ்ஞானம் என்ற பெயரில் கற்றுக்கொடுக்கப்படுகிறதே தவிர, மேலும் விஞ்ஞான அறிவு பெறவோ அதில் ஆராய்ச்சி புரியவோ வசதிகள் கிடைப்பது அரிதாகவுள்ளது. அப்படி அவை கிடைத்தாலும் எல்லோரும் பெறக்கூடிய எளிய செலவில் அமையாமல், ஒருசில கொடுத்துவைத்தவர்களே அனுபவிக்க வேண்டியுள்ளது. இந்த நிலையில் நம் நாட்டில் நியூட்டன்களோ, கலிலியோக்களோ, மார்க்கோனிகளோ தோன்ற முடியுமா? எப்போதோ ஒரு ராமனும், ஒரு போஸும் தோன்றினால் அதைக் கொண்டே பெருமை அடித்துக் கொள்வதுதான் சிறந்ததா?

மேனாட்டு விஞ்ஞானம் பல்லாயிரக் கணக்கான மைல் வேகத்தில் வளர்ந்துகொண்டு வருகிறது. நம்நாட்டில் இன்னும் பத்துமைல் வேகம்கூடக் காணமுடியவில்லை அதற்கும் எத்தனை தடைகள்! புனாவைச் சேர்ந்த பேராசிரியர் ஜே. ஷி, பால் கெடாமல் இருக்கப் புது முறை கண்டார் அல்லவா? அதற்கு அரசினர் உதவி புரியவில்லை. "நான்கு வருடமாக முயற்சித்தும் சர்க்காரோ பால் பண்ணைக்காரர்களோ இதில் சிரத்தை காட்டவில்லை என்று அவர் கூறுகிறார்." (தினமணி-1—7—'51—8-ம் பக்கம்) எப்படி- நம் முன்னேற்றம்!......

இந்த நிலை மாறவேண்டாமா? விஞ்ஞானத்தை நம் கண்பணுக்கிக்கொள்ள வேண்டாமா? அதன் அரிய சாதனைகளை நாம் அனுபவிக்க வேண்டாமா? மேலும் பல புதிய கருவிகளை நாம் புனைய வேண்டாமா? மேனாட்டின் வளர்ச்சியில் நூற்றில் ஒரு பங்காவது நாம் பெற வேண்டாமா? வேண்டும். வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? சிந்தியுங்கள் தோழர்களே! சிந்தியுங்கள்!

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

டாரா காளா? கேட்பாரா அவர்? மாட்டார்! அந்தக் கேள்வியை மட்டும் அவர் கேட்டுவிட மாட்டார். கேட்டால் அவருடைய சர்க்காரின் சாயம் வெளுத்துவிடும். குற்றம், டாக்டர்கள்மீது இல்லை, இந்த ஆட்சியாளர்கள்மீதுதான் என்பதும் தெளிவாக விளங்கிவிடும். ஆகவேதான் அவர் அந்தக் கேள்வியை மட்டும் கேட்க முன்வரவில்லை.

தோழர் காளா, அமைச்சராக வீற்றிருப்பவர். ஆகவே அவர் தம்முடைய சர்க்காரைச் சங்கடத்திற்கு உள்ளாக்கக்கூடிய கேள்விகளைக் கேட்காமலிருந்துவிடுவார்

ஆனால் நாம் அப்படி இருக்க முடியுமா? நாட்டு நன்மைக்கான கேள்விகளைக் கேட்டுத்தானே ஆகவேண்டும்?

டாக்டர்கள், கிராம வைத்திய சாலைகளிற் பணியாற்ற மறுக்கிறார்களே, அது ஏன் தெரியுமா?

1. அந்த வைத்தியசாலைகளில், நோயாளிகளைப் பரிசோதித்துப் பார்ப்பதற்குத் தேவையான மருத்துவக் கருவிகள் ஆட்சியாளர்களால் வாங்கி வைக்கப்படவில்லை.

2. நோயாளிகளின் நோயைப் போக்குவதற்குத் தேவையான மருந்து வகைகளும் போதுமான அளவு, அவர்களால் வாங்கி வைக்கப்படவில்லை.

3. ஆண்டுதோறும் ஆயிரம் ரூபாய்—இரண்டாயிரம் ரூபாய் என்ற விதத்திலே செலவழித்து, ஐந்து ஆண்டுகள் அரும்பாடுபட்டு மருத்துவக் கலையைக் கற்றுத் தேர்ந்து, ஆறுவதாண்டில் எம். பி. பி. எஸ். என்கிற பட்டம் பெற்று வெளிவருகின்ற டாக்டர்களுக்கு, அவர்கள் கிராம வைத்தியசாலைகளில் பணியாற்ற முன்வந்தால், ஆட்சியாளர்களால் தரப்படுகின்ற ஊதியம்—கவனமாகப் படியுங்கள்—கேவலம் ரூபா 75.

* **மருத்துவக் கருவிகள் கிடையாது**
* **மருந்து வகைகள் கிடையாது**
* **மாத ஊதியம் கேவலம் 75**

இந்த நிலையில் எம். பி. பி. எஸ். பட்டம் பெற்ற டாக்டர்கள் கிராம வைத்தியசாலைகளிற் பணியாற்ற முன்வரவில்லை என்றால் எப்படி வருவார்கள்? வரத்தான் மாட்டார்கள்! வரத்தான்கூடாது! வருவது முறையும் ஆகாது!

* கிராம வைத்தியசாலைகள் ஒவ்வொன்றிலும் குறைந்த பட்சத் தேவையைப் பூர்த்தி செய்கிற அளவுக்காவது மருத்துவக் கருவிகளையும் மருந்து வகைகளையும் வாங்கி வைக்கவேண்டும்.

* அங்குப் பணியாற்ற முன்வருகிற டாக்டர்களுக்குக் குறைந்தது மாத ஊதியம் ரூபா 200 என்று ஏற்பாடு செய்யவேண்டும்.

இந்த இரண்டு ஏற்பாடுகளையும் ஆட்சியாளர்கள் செய்திருப்பார்களானால் டாக்டர்களும் தயார் தயார் என்று கிராமப் பகுதிகளிற் பணியாற்ற முன்வந்திருப்பார்கள். கிராம வைத்தியசாலைகளும் ஜாம் ஜாமென்று நடைபெற்றிருக்கும்.

ஆனால் அன்பர் காளாவோ இந்த ஏற்பாடுகளில் எதையும் செய்யாமல், கிராம வைத்தியசாலைகளை இழுத்துச் சாத்திப் பூட்டிவிட்டு, குண்டூருக்குப் போகிறார் டாக்டர்கள்மீது சாடி சொல்லிக்கொண்டு.

சொல்லலாமா?

சொல்வது நியாயமா?

கேட்கிறோம்—தோழர் காளாவை அல்ல—தோழர் காளாவைத் தங்களுடைய தலைவர்களில் ஒருவராகக் கருதிப் போற்றுகின்ற காங்கிரஸ் கட்சியின் உண்மைத் தொண்டர்களை!—குற்றவாளி யார்? ஆட்சியாளர்களா? அல்லது டாக்டர்களா?

"புரட்சி வந்தால்!"

(இரா. இளந்திரையன்)

★

'தனியொருவற் குணவின்றேல் தரணி தன்னைத்
தரைமட்டம் ஆக்கிடுவோம்' என்றுரைத்த
நனிபெரியன் தியாகத்தால் நாட்டை யாளும்
நல்லோரே நீங்களெல்லாம் பீடத் தேறி
நுனிமரத்தில் பதுமைகள்போல் காட்சி நல்க
நுழைந்தீரோ அரசியலில்? என்ன வாழ்வு?
பனித்துளிகள் கதிரோன்முன் படும்பாடன்றோ
பாராள்வீர் நும்பாடு புரட்சி வந்தால்!

உறவினர்க்கும் உம்முடைய சாதியார்க்கும்
உயரலுவல் தேடுவதே தொழிலாய்க் கொண்டு
மறத்தமிழன் நாட்டினிலே ஆட்சி செய்யும்
மாண்புடையீர் உம்நிலைமை அறிந்தீரில்லை!
பறந்ததுவன் பருந்தென்று பாம்பு எண்ணிப்
படமெடுத்து ஆடிடுமேல் படும்பா டன்றோ
மறந்தனர்செந் தமிழர்நமை என்று எண்ணி
மறஞ்செய்யும் நும்பாடு புரட்சி வந்தால்!

சிறியஒரு கூட்டத்துக் கஞ்சி நாட்டில்
சீர்திருத்தம் கொண்டுவரத் தயங்குகின்ற
அறிவுடையீர்! நாடாளும் அலுவல் பெற்றீர்!
அநியாயம் என்றுணர்ந்தும் அதையே செய்வீர்!
சிறியதென வெம்பகையை எண்ணிப் பின்னர்
சீர்கேடு அடைவோர்தம் பாடு அன்றோ
வெறிபெருக்கும் வீரமுடைத் தமிழர் தம்பால்
விளையாடும் நும்பாடு புரட்சி வந்தால்!

நீதிக்குத் தோன்றுகிற கழகங் கட்கு
நித்தமொரு அடக்குமுறை தோற்றுவித்துப்
பாதித்து வருகின்றீர் மக்கள் போக்கைப்
பைந்தமிழ நாடாளும் அலுவல் பெற்றீர்!
ஆதிமுதல் அடக்குமுறை தர்பார் செய்த
அனைவோரும் பட்டபா டதுவே யன்றோ
சாதிக்கு ஒருநீதி வழங்கி நாட்டில்
தாண்டவஞ்செய் நும்பாடு புரட்சி வந்தால்!

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

தனக்கு வேண்டியவையெல்லாம் தானாகவே கிடைத்துவிடும் என்கிற தவறான எண்ணத்தின் விளைவு தான் பிரார்த்தனை.

பிரார்த்தனை என்கிற விசித்திர நடவடிக்கை காரணமாக நாட்டிலே, சோம்பேறித்தனம் வளர்கிறது. கோழைத்தனம் ஓங்குகிறது. தன் முயற்சி தேய்கிறது. மனித சக்தியிடம் காட்டப்பட வேண்டிய நம்பிக்கை நாசமாகிறது. உலகத்தின் முன்னேற்றம் தடைப்படுகிறது.

ஆண்டவனை நோக்கிப் பிரார்த்தனை புரிவதிலே மனித சமுதாயத்தால் இதுவரை செலவிடப்பட்டிருக்கும் நேரமும் நினைப்பும் மட்டும் வேறு சிறந்த துறைகளிலே செலவிடப்பட்டிருந்தால், உலகம், இதற்குள், எவ்வளவோ முன்னேறியிருக்கமுடியும்.

இந்த நாட்டை நாசமாக்கி வருகின்ற பழமைச் சக்திகளை அழித்து ஒழிக்கும் அரும்பணியை மேற்கொண்டிருக்கும் பகுத்தறிவியக்க இளைஞர்கள், வேறு பல மூட நம்பிக்கைகளை முறியடித்து வரும் முக்கியமான பணி புரிவது போலவே, பிரார்த்தனை புரிவதிலே நம் மக்களுக்கு இருந்துவருகிற மூடநம்பிக்கையையும் தகர்த்தெறிந்து வருகின்றனர்.

மூடநம்பிக்கைகளிலே மிகவும் முக்கியமானது, மிக அதிகமான கேட்டினைத் தருவது, பிரார்த்தனை புரியும் பழக்கம்.

எனவேதான் பிரார்த்தனைப் பழக்கத்தின் பயனற்ற தன்மையைப் பொதுமக்களுக்கு விளக்கிக் காட்டும் புனிதமான பணியையும் செய்து வருகின்றனர் பகுத்தறிவுத் தோழர்கள்.

அந்தப் பணியை, நாடு நலம் பெறவேண்டும் என்று எண்ணுகிற நல்லறிவாளர்கள் அனைவரும் பாராட்டிப் புகழக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

பாராட்டிப் புகழ மட்டுமல்ல, அந்த வீரமிக்க பணி புரியும் வைர நெஞ்சம் படைத்த இளைஞர்களோடு ஒத்துழைக்கவும் கடமைப் பட்டிருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழக

மாநில மாநாடு

★

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

★

டிசம்பர் 13, 14, 15, 16 தேதிகளில்

★

தோழர்களே, திரண்டு வாரீர்!

செந்தமிழர் படிக்க வேண்டிய சிந்தனை ஓவியங்கள்.

★

இராதாமணாளன் இயற்றியவை

மனப்புயல்	2	0
இளவரசி	1	8
பொற்சிலை	1	0
மூடுபனி	1	0
பசி	1	0
பாலைவனம்	0	10
புது வெள்ளம்	0	8
பேசும் பிணம்	0	8
பயணத்தில் முத்தம்	0	8
இன்பக் கனவு	0	8
துளிதேன்	0	8
கந்தலீலா	0	8
களபலி	0	6
மதம் அவசியமா	0	3
அய்யோ கடவுளே	0	3

கருணாநிதியின் கருத்தோவியங்கள்

இன முழக்கம்	0	8
வாழமுடியாதவர்கள்	0	12
கோவையில் கருணாநிதி	0	8
சங்கிலி சாமி	0	8
போர் முழக்கம்	0	6
கருணாநிதியின் கருத்துரைகள்	0	8
அறப்போர்	0	3
கயிற்றில் தொங்கிய கணபதி	0	3

ஏ. வி. பி. ஆசைத்தம்பி தீட்டியவை

கொலைகாரி	0	12
சென்னையில் ஆசைத்தம்பி	0	4
ஆசைத்தம்பி அறை கூவல்	0	3
ஆசைத்தம்பி முத்துக்குவியல்	0	3
நாம் இருவர்	0	4
ஆண்களை நம்பலாமா	0	3

மற்றும்

கல்வி நீரோடை	0	6
ஏழை எரிமலை	0	8
கன்னியின் சபதம்	0	8
சிந்தனைச் சித்திரம்	0	10
பரமசிவனுக்கு பகிரங்கக் கடிதம்	0	3
சதிகார சமுதாயமே	0	3
என் கடன் களிப்பூட்டலே	0	2
சமுதாய பலிபீடம்	0	8
தொழிலாளர் விழிப்பு	0	8

பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத் தெரு, சென்னை

Edited Printed and Published by P. C Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B. A. (Hons.)